DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 24/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : டாக்டர்.அருள்செல்வி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 09.04.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 9th April2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் உள்ள பின்ங் ஸ்கேன் சென்டரில் ரேடியாலஜிஸ்ட் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் அரசுமருத்துவமனையில் நான் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது கடந்த 07.04.2012ம் தேதி அதிகாலை 12.05 மணிக்கு இசக்கியரசன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக மணி என்பவரால் காவல்நிலையக் குறிப்பாணையுடன் அழைத்து வரப்பட்டார். 06.04.2012 அன்று இரவு 8.40 மணியளவில் வெள்ளக்கவுண்டன்பட்டியில் வைத்து பஸ்ஸில் வைத்து அடையாளம் தெரிந்த ஆண் ஒருவரும், அடையாளம் தெரியாத ஆண் ஒருவரும் கைகளால் அடித்து அவரை காயப்படுத்தியதாக என்னிடம் கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன

1. அவரது கழுத்தின் இருபக்கமும் 1x1x1/2 செமீ அளவிலான நககீரல்கள் காணப்பட்டன.

வெளிநோயாளியாக அவருக்கு சிகிச்கை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். **அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னிடம் சிகிச்சைக்கு வந்த இசக்கியரசன் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து 3–1/2 மணிநேரம் காலதாமதமாக சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான். இசக்கியரசனின் காயச்சான்றிதழில் அவருக்கு நடுமுதுகில் காயம் இருந்ததாக துலங்குமா என்றால் இல்லை. அ.சா.ஆ.3 ஆவணத்தில் எந்த நபர் தாக்கியதால் தனக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு இசக்கியரசன் கூறியதாக துலங்காது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய காயம் இசக்கியரசன் சிகிச்சைக்கு வருவதற்கு அரைமணிநேரத்திற்கு முன்பு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**